# செயலாற்றுகை அறிக்கை
# 2015

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

பொதுத் திறைசேரி
நிதி அமைச்சு
கொழும்பு - 01

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்........................................................................................................ 1**

1.1 நிறுவன அமைப்புமுறை.................................................................................... 1

1.2 நோக்கு......................................................................................................... 1

1.3 செயற்பணி..................................................................................................... 1

1.4 இலக்கு......................................................................................................... 1

1.5 குறிக்கோள்கள்................................................................................................ 2

1.6 நிறுவன அமைப்பு முறைக்கட்டமைப்பு.................................................................. 3

1.7 தொழிற்பாடுகள்.............................................................................................. 4

1.7.1 வியாபார கொள்கைப் பிரிவு............................................................................ 4

1.7.1.1 வியாபாரக் கொள்கை................................................................................ 4

1.7.1.2 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள்............................................................ 4

1.7.1.3 தீர்வை வரிக் கொள்கை............................................................................ 5

1.7.1.4 பொது (வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை.......................... 6
விடயங்களுக்கிடையிலான குறுக்குவெட்டு)

1.7.2 முதலீட்டுக் கொள்கைப் பிரிவு......................................................................... 6

1.7.3 நிருவாக மற்றும் நிதிப் பிரிவு.......................................................................... 7

1.7.3.1 மனித வளம............................................................................................. 8

**2. கொள்கைகளை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.................................................. 8**

2.1 வர்த்தக உடன்படிக்கைகள்................................................................................ 8

2.1.1 வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான முன்னேற்றம்.............................................. 9

2.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(ISFTA)......... 9

2.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(PSFTA) 10

2.1.1.3 தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(SAFTA) ................ 11

2.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)................................ 13

2.1.1.5 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 14

2.1.1.6 உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை.......... 17

2.1.1.7 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான வெளிநாட்டு........... 18
வர்த்தகம்

2.2 கூட்டுப் பொருளாதார உடன்படிக்கைகள்............................................................... 19

2.3 இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பு...................................................................... 20

2.3.1 2015 இல் இயைபு முறைகளுக்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட தேசிய உப......... 21
பிரிவுகள்

2.3.2 தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சுங்கத் தீர்வை வரிக் கட்டமைப்பு- வ.பா.க 2015 21

2.3.3 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்தின்...... 21
கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

2.4 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரிச்..... 21
சட்டம்

2.5 தீர்வை வரி விலக்களித்தல்.................................................................................. 22

2.6 முதலீடுகள்..................................................................................................... 23

2.6.1 வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI)............................................................... 23

2.6.2 வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்................................................ 24

2.7 சர்வதேச ஒத்துழைப்பு....................................................................................... 26

2.7.1 சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF)..................................................................... 26

2.8 சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதங்கள்.......................................................... 27

**3. நிருவாகம் மற்றும் நிதி தொடர்பான செயலாற்றுகை**........................................ 28
3.1 நிருவாகம்.................................................................................................. 28
3.2 விசேட கருத்திட்டங்கள................................................................................. 32
3.2.1 சலுகை அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான திட்டம் 32
3.2.2 அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற சிரேட்ட அரச துறை................. உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் 32
3.3 நிதிப் பிரிவு................................................................................................. 32
3.4 கணக்காய்வு விசாரணைகள்........................................................................... 34

**4. இணைப்புகள்**............................................................................................. 35

# அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.1 | இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் - 2014 / 2015 | 10 |
| அட்டவணை 2.2 | பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் - 2014 / 2015 | 11 |
| அட்டவணை 2.3 | தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கை வரிவிலக்கு நிகழ்ச்சித் திட்டம் | 12 |
| அட்டவணை 2.4 | இலங்கைக்காக தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் - 2014/2015 | 13 |
| அட்டவணை 2.5 | ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் - 2014 / 2015 | 14 |
| அட்டவணை 2.6 | வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தீர்வை வரி விலக்கு அட்டவணை | 15 |
| அட்டவணை 2.7 | உடன்படிக்கை செய்யப்பட்டவுடன் வரியை நீக்குதல் | 16 |
| அட்டவணை 2.8 | சாதாரணமாக வரியை நீக்குதல் | 16 |
| அட்டவணை 2.9 | 2015 இல் வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் | 18 |
| அட்டவணை 2.10 | கூட்டுப் பொருளாதார வர்த்தகக் குழுக்களின் நிலைத்தொகுப்பு | 19 |
| அட்டவணை 2.11 | 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வை வரிக் கட்டமைப்பு | 20 |
| அட்டவணை 2.12 | 2008 முதல் 2015 வரை தீர்வை வரிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | 21 |
| அட்டவணை 2.13 | 2015 ஆம் ஆண்டில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தீர்வை வரி விலக்களிப்பு | 22 |
| அட்டவணை 2.14 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சாதாரண தீர்வை வரி விலக்களிப்பு | 23 |
| அட்டவணை 2.15 | முதலீட்டுச் சபை எதிர்மறைப் பட்டியலின் கீழ் முதலீட்டுச் சபையின் வேண்டுகோள் | 24 |
| அட்டவணை 2.16 | 2015 இல் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் | 25 |
| அட்டவணை 2.17 | 2015 இல் சார்க் அபிவிருத்தி நிதிக் கூட்டங்கள் | 26 |
| அட்டவணை 3.1 | 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியணி | 28 |
| அட்டவணை 3.2 | 2015 இல் வெளிநாட்டுப் பயிற்சிக் கற்கைநெறி, கற்கைச் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்கள் | 30 |
| அட்டவணை 3.3 | 2015 இல் உள்நாட்டுப் பயிற்சிக் கற்கைநெறி/ கற்கைச் சுற்றுலாக்கள்/ கருத்தரங்குகள் | 31 |
| அட்டவணை 3.4 | வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் பயன்பாடு - 2015 | 33 |
| அட்டவணை 3.5 | அரசாங்க அலுவலர்களின் முற்பண “பீ”கணக்கு - 2015 | 34 |
| அட்டவணை 4.1 | 2015 இல் இயைபு முறைக்கான தேசிய உப பிரிவு | 35 |
| அட்டவணை 4.2 | 2015 இல் தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வை வரி விலக்கு | 37 |
| அட்டவணை 4.3 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம் (சுங்க இறக்குமதித் தீர்வை வரி) | 38 |
| அட்டவணை 4.4 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரிச் சட்டத்தின் கீழான வரித் திருத்தங்கள் | 39 |
| அட்டவணை 4.5 | கணக்காய்வு விசாரணைகள் – அரசாங்கக் கணக்காய்வு - 2015 | 41 |
| அட்டவணை 4.6 | கணக்காய்வு விசாரணைகள்– முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் - 2015 | 42 |

# 1. அறிமுகம்

## 1.1 நிறுவன அமைப்புமுறை

நாட்டின் சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பின் மேம்பாடு மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றின் பரந்த குறிக்கோள்களுடன், நிதி அமைச்சின் பொதுத் திறைசேரியின் கீழ் 2006 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இந்தத் திணைக்களம் தாபிக்கப்பட்டு வியாபாரம், தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டது.

திணைக்களமானது, பிரதானமாக இலங்கையின் பொருளாதாரத்தினதும் மக்களினதும் நன்மைக்காக வெளிநாட்டு வியாபாரம், தீர்வை வரி மற்றும் முதலீடுகள் தொடர்பான நிலைத்துநிற்கும் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. திணைக்களத்தின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு அதற்கு மீண்டும் 2012 ஆம் ஆண்டில் “வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்” என மறுபெயரிடப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் சிறந்த சேவையொன்றை வழங்கும் பொருட்டு திணைக்களத்தின் உபாயரீதியான கொள்கை மீளமைக்கப்பட்டதுடன், அதன் நோக்கு, செயற்பணி, இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் நிறுவன அமைப்புமுறைக் கட்டமைப்பு என்பன மீள்வகுத்தமைக்கப்பட்டது.

திணைக்களமானது, அதன் முக்கியமான பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வருமாறு மூன்று பிரிவுகளை அமைத்துள்ளது.

i. வியாபாரக் கொள்கைப் பிரிவு
ii. முதலீட்டுக் கொள்கைப் பிரிவு
iii. நிருவாக மற்றும் விசேட திட்டங்கள் பிரிவு

## 1.2 நோக்கு

நாட்டின் முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு வியாபாரம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் கொள்கைகளைத் தாபிப்பதனை உறுதிப்படுத்துதல்.

## 1.3 செயற்பணி

முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு சர்வதேச பொருளாதார ஒருமைப்பாட்டுக்கு வசதியளிப்பதற்கு வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சூழலொன்றை உருவாக்குதல்.

## 1.4 இலக்கு

- பிராந்தியத்தில் விருப்பத்திற்குரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான இடமாக இலங்கையை மேம்படுத்துதல்.
- வியாபாரத்தை இலகுபடுத்தும் சுட்டியை 50 இற்குக் கீழான நிலையில் வைத்துக் கொள்வதற்கு முயற்சித்தல்

- கைத்தொழில் நட்பான தீர்வை வரி நிருவாகமொன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.
- 2020 ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 25 பில்லியன் வரை வர்த்தகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
- அரசாங்கத் துறை உத்தியோகத்தர்களுக்காக சலுகைரீதியான வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்குதல்.
- வியாபாரத்திற்காக போட்டிக்குரிய சாதகமான வர்த்தக உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.

## 1.5 குறிக்கோள்கள்

- அடுத்த இரண்டு வருடங்களில் தற்போதிருக்கும் முதலீட்டு அதிகாரமளித்தல் கொள்கையை இலகுபடுத்துதல்.
- அடுத்த இரண்டு வருடங்களில் முதலீட்டை அதைரியப்படுத்தும் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
- அடுத்த மூன்று வருடங்களில் இறக்குமதித் தயாரிப்புத் திட்டத்திற்கான தற்காலிக இறக்குமதியையும் சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட் குதக் கொள்கையையும் வலுவூட்டுதல்.
- ஒரு வருட காலத்திற்குள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறைக்கான கொள்கை யொன்றைத் தயாரிப்பதற்காக தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல்.
- இரண்டு வருடங்களுக்குள் சிறிய தொழில் முயற்சியாளர்களை நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் வரையும், நடுத்தர தொழில் முயற்சியாளர்களை பாரிய அளவு தொழில் முயற்சியாளர்கள் வரையும் மேம்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- 2018 ஆம் ஆண்டளவில் சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்.
- அடுத்த இரண்டு வருடங்களில் வாடிக்கையாளர் நட்பான தரவுத் தளத்தினூடாக தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுதல்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான சட்ட வழிகாட்டலைத் தயாரித்தல்.
- இந்த வருடத்திற்குள் அரசாங்கத் துறை உத்தியோகத்தர்களுக்காக சலுகைரீதியான வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதனை முறைப்படுத்துதல்.
- 2017 ஆம் ஆண்டளவில் பொருட் பரிமாற்ற வர்த்தகத்தில் ஐ.அ.டொலர் 15 பில்லியன் வரை வர்த்தகத்தை மேம்படுத்துதல்.
- அடுத்த இரண்டு வருடங்களில் 10% சதவீதத்திற்கும் குறைவான அளவுக்கு தீர்வை வரி சார்ந்த பிரச்சினைகளைக் குறைத்தல்.
- நாட்டின் வர்த்தகப் பொருளாதாரத்தின் சமச்சீரற்ற தன்மைக்குள் எதிரிடை நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.
- உளகலாவிய ரீதியில் சாதகமான வர்த்தகத்திற்கான/ கைத்தொழிலுக்கான வாய்ப்பினை வழங்கக்கூடிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.

## 1.6 நிறுவன அமைப்புமுறைக் கட்டமைப்பு



## 1.7 தொழிற்பாடுகள்

### 1.7.1 வியாபார கொள்கைப் பிரிவு

வியாபார கொள்கைப் பிரிவானது, வியாபாரம், தீர்வை வரி மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீளாய்வு விடயங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. இப்பிரிவின் முக்கியமான செயற்பாடுகளை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

#### 1.7.1.1 வியாபாரக் கொள்கைகள்

i. பரந்த வியாபாரக் கொள்கை வரைசட்டகத்தின் அபிவிருத்தி.
ii. இலங்கையின் வியாபாரக் கொள்கை தொடர்பான சட்டவாக்கங்களைத் தொகுத்தல்.
iii. இலங்கையின் வியாபாரக் கொள்கை தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தொகுத்தல்.
iv. வியாபாரக் கொள்கை தொடர்பான விடயங்களையும் மாற்றுக்களையும் பகுப்பாய்வு செய்தல்.
v. விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரிச் சட்டத்தை அமுல்படுத்துதல்.
vi. வியாபாரக் கொள்கையை மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்துதலும்.
vii. மோட்டார் வண்டி இறக்குமதிக் கொள்கையின் அபிவிருத்தி.
viii. வர்த்தகக/ வியாபாரப் பேரவைகளை ஒழுங்குசெய்தல்
ix. வர்த்தகக் கொள்கைப் பங்குதாரர்களின் கலந்துரையாடலை நடாத்துதல்.
x. வர்த்தகக் கொள்கையை வெளியிடுதல்.
xi. வியாபாரம் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் கூட்டிணைதல்.
xii. பங்குதாரர்களினால் முன்வைக்கப்படும் வியாபாரக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
xiii. வர்த்தகக் கொள்கைப் பத்திரத்தின் அபிவிருத்தி
xiv. வர்த்தகத் திணைக்களத்துடன் கூட்டிணைதல்.
xv. வர்த்தகக் கொள்கை தொடர்பான பாராளுமன்ற அலுவல்கள்
xvi. வர்த்தகக் கொள்கை தொடர்பான நீதி மன்ற வழக்குகளுக்கான பதில்களைத் தொகுத்தல்.
xvii. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / அவதானிப்புகள் / கருத்துரைகள் என்பவற்றைத் தயாரித்தல்.

#### 1.7.1.2 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள்

i. இலங்கையின் ஒருங்கிணைந்த எதிர்மறை / தாராளமயமாக்கப்படாத பட்டியலை (சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினூடாக) அபிவிருத்தி செய்தல்.

ii. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் கடப்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்தல்.
iii. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் ஒருங்கிணைந்த வரி விலக்களிப்பு திட்டத்தைத் தயாரித்தல்.
iv. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான நிலையியற் குழுவைக் கூட்டிணைத்தல்.
v. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான கூட்டிணைப்புக் குழுவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான விடயங்களைக் கூட்டிணைத்தல்.

vi. இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு இணங்க வியாபாரக் கொள்கையை மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்துதலும்.

vii. பின்வரும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்:

- இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- சேவைகளில் வர்த்தகம் தொடர்பான சார்க் உடன்படிக்கை (SATIS)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
- வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை (BIMSTEC FTA)
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கைப் பேச்சுவார்த்தையின் கொள்கைக் கூட்டிணைப்பு (CSFTA and US-SL FTA, ETCA)
- கூட்டு வர்த்தகக் குழுக்களைக் கூட்டிணைத்தல் (கென்யா, வியடனாம், ஜப்பான், ரஷ்யா போன்றன).

### 1.7.1.3 தீர்வை வரிக் கொள்கைகள்

i. தீர்வை வரி வழிகாட்டலை திருத்தியமைத்தலும் இற்றைப்படுத்தலும்.(அத்தியாயம் அத்தியாயமாக)
ii. தீர்வை வரி கைத்தொழில் பொருத்தப்பாடும் சந்தை விவரணத்தைத் தொகுத்தலும். (கொத்தணி)
iii. தீர்வை வரி முரண்பாடுகளை அகற்றுவதற்காக கைத்தொழில் (பெறுமதி சேர்ப்பு) மற்றும் சந்தைப் பகுப்பாய்வு
iv. 19 (அ) வரி விலக்களிப்பைக் கூட்டிணைத்தல்.
v. 19 (அ) வரி விலக்களிப்புக்கான தகவல் முறையை விருத்திசெய்தல்.
vi. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு வசதியளித்தல்.
vii. வருமானப் பாதுகாப்புக் கட்டளையை வெளியிடுதல்.
viii. தீர்வை வரி முரண்பாடுகள் தொடர்பான மனக்குறைகளைத் தீர்த்தல்
ix. இ.மு குறியீட்டு தேசிய உப பிரிவுகளை முகாமைசெய்தல்.
x. விலைமதிப்பு உட்பட சுங்க வழக்குகள் தொடர்பான மேன்முறையீடுகளை மீளாய்வுசெய்தல்.
xi. சுங்க நிருவாகம் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வுசெய்தல்.
xii. இ.மு. குறியீடுகளுக்கு இணங்குதலும் இடம்மாற்றி வைத்தலும்.
xiii. விசேட வர்த்தகப் பொருள் வரிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

xiv. TIEP திட்டத்தின் கொள்கையைக் கூட்டிணைத்தல் .

xv. சுங்க வரி செலுத்தாப் பொருட் குதங்களின் வசதி தொடர்பான கொள்கையைக் கூட்டிணைத்தல்.

xvi. வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல்.

xvii. வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்.

### 1.7.1.4 பொது (வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை விடயங்களுக்கிடையிலான குறுக்குவெட்டு)

i. மோட்டார் வாகனப் பொருத்தல் கைத்தொழில் தொடர்பான கொள்கையை வகுத்தல்.

ii. முதலீட்டுச் சபை அங்கீகரித்த கருத்திட்டங்களின் கீழ் இறக்குமதிகளின் எதிர்மறைப் பட்டியலை மீளாய்வுசெய்தல்.

iii. வியாபாரக் கொள்கை சார்ந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள்.

### 1.7.2 முதலீட்டுக் கொள்கைப் பிரிவு

அரச நிறுவனங்களின் முதலீடு தொடர்பான கொள்கை விடயங்களுக்கு முதலீட்டுக் கொள்கைப் பிரிவு பொறுப்பாக இருக்கின்றது. இந்தப் பிரின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு.

i. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடு தொடர்பான தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்.

ii. தொடர்புடைய பங்குதாரர்களுடன் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை வரைசட்டகம் ஒன்றை விருத்தி செய்தல்**.**

iii. வெளிநாட்டு முதலீடு தொடர்பான சட்டவாக்க விடயங்களுக்கு சமூகமளித்தல்.

iv. நிதி அமைச்சின் சார்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளைக் கவனத்திலெடுத்தல்.

v. வங்கிக் கிளைகளையும் தன்னியக்க காசு இயந்திரங்களையும் தாபித்தல், மீள் அமைத்தல் மற்றும் முடிவுறுத்துதல் தொடர்பான அங்கீகாரத்தை வழங்குதல்.

vi. இலங்கையின் நிதி நுண்மதிப் பிரிவினால் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

vii. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம், வங்கிச் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் தொடர்பாக சகல அங்கீகாரங்களையும் வழங்குதல்.

viii. நிதிக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், பணத் துடைப்புத் தடுப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத நிதி மறைப்புச் சட்டம் தொடர்பான மாநாடு தொடர்பாக சகல அங்கீகாரங்களையும் வழங்குதல்.

ix. சுங்க வரி செலுத்தாப் பொருட் குதங்கள் தொடர்பான அங்கீகாரம்.

x. சுங்க வரி செலுத்தாப் பொருட் குதங்கள் தொடர்பான தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்.

xi. தொடர்புடைய பங்குதாரர்களுடன் சுங்க வரி செலுத்தாப் பொருட் குதங்கள் தொடர்பான வரைசட்டகம் ஒன்றை விருத்தி செய்தல்.

xii. தொடர்புடைய பங்கு தாரர்களுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை வரைசட்டகம் ஒன்றை விருத்தி செய்தல்.

xiii. முதலீட்டுச் சபைச் சட்டம் தொடர்பான விடயங்களில் கவனம்செலுத்துதல்.

xiv. உபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

xv. முதலீட்டுச சபையின் எதிர்மறை பட்டியலிலுள்ள பொருட்கள் தொடர்பான உடன்பாட்டை வழங்குதல்.

xvi. தற்போதைய முதலீட்டுச சபையின் எதிர்மறை பட்டியலை மீளாய்வு செய்தலும் இடைவெளிகளைப் பகுப்பாய்வு செய்தலும்.

xvii. TIEP திட்டம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

xviii. TIEP திட்டம் தொடர்பான புதிய கொள்கை வரைசட்டகம் ஒன்றை விருத்தி செய்வதற்காக மீளாய்வு செய்தலும் உதவியளித்தலும்.

xix. தனியார் அரசாங்கப் பங்குடமை (PPP) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

xx. நிதிச் சட்டம் (பிரதான ஒழுங்குவிதிகள்) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

xxi. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் அபிவிருத்தி தொடர்பான கொள்கை விடயங்களுக்கு உதவுதல்.

xxii. உள்நாட்டு முதலீட்டுக்கான முதலீட்டு வாய்ப்புக்களைத் தொகுத்தல்.

xxiii. புவி அடிப்படையிலான முதலீட்டு வரைபடமொன்றை விருத்திசெய்தல்.

xxiv. சார்க் மற்றும் சார்க் அபிவிருத்தி நிதியம் தொடர்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல்.

xxv. சர்வதேச நாணய நிதியம் மற்றும் பொதுநலவாய செயலகம் தொடர்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல்.

xxvi. தொடர்புடைய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல்.

xxvii. முதலீடு தொடர்பான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

xxviii. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / அவதானிப்புகள் / கருத்துரைகள் என்பவற்றைத் தயாரித்தல்.

### 1.7.3 நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

நிருவாக மற்றும் நிதிப் பிரிவானது மனித வளங்கள், நிதி மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றது. அவை பின்வருமாறு;

i. இறுதிக் கணக்குகளையும் அலுவலர் முற்பணக் கணக்குகளையும் தயாரிப்பதன் மூலம் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் உட்பட மனித வள முகாமைத்துவம்.

ii. சொத்துக்களை எடுத்தலும் சொத்துக்களின் பதிவைப் பராமரித்தலும் (பௌதீக வள முகாமைத்துவம்).

iii. சுற்றாய்வுச் சபை, ஆவண முகாமைத்துவம் போன்றவை உட்பட கணக்காய்வு அவதானிப்புகளுடனும் அரசாங்க நிதி வழிகாட்டல்களுடனும் இணங்குதல்.

### 1.7.3.1 மனித வளம்

2015 ஆம் ஆண்டின் இறுதியில், திணைக்களமானது மொத்தம் 11 நிறைவேற்றுத் தர அலுவலர்களையும் 42 உதவி அலுவலர்களையும் கொண்டிருந்தது. இந்தத் திணைக்களம், பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தலைமை வகிக்கப்படுகின்ற அதேவேளையில், திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரையும் மற்றும் உதவிப் பணிப்பாளர்களையும் உள்ளடக்குகின்றது. 2015 ஆம் ஆண்டில் 14 நிறைவேற்றுத் தர அலுவலர்களையும் 43 உதவி அலுவலர்களையும் உள்ளடக்கியதாக திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 57 ஆகக் காணப்பட்டது. (விபரங்கள் அட்டவணை 3.1 இல் காணப்படுகின்றது.)

## 2. கொள்கைகளை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்

### 2.1 வர்த்தக உடன்படிக்கைகள்

2015 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இலங்கையின் சர்வதேச வியாபாரக் கொள்கையானது, உள்நாட்டுக் கைத்தொழிலின் இயலளவின் வளர்ச்சிக்காகவும், இலங்கையை வர்த்தகத்திற்கும், அறிவுக்குமான மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான சூழலொன்றை உருவாக்கும் பொருட்டு, பொருட்களின் வர்த்தகம், சேவைகளின் வர்த்தகம், முதலீடுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக பல்தரப்பு மற்றும் இருதரப்பு உடன்படிக்கைகள் ஊடாக உலகலாவிய பொருளாதாரத்திற்குள் மேலும் ஒருங்கிணைப்பதனை மையமாகக் கொண்டிருந்தது.

உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கைகளைப் பொருத்த வரையில், வர்த்தகத் தொழில் நுட்பத்திற்கான தடைகள், துப்புரவேற்பாடு, தாவரத் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் வழக்கமான கூட்டுறவு தொடர்பான குழுக் கூட்டங்களில் இலங்கை தொடர்ச்சியாக கலந்து கொண்டது. வர்த்தக பேச்சுவார்த்தைகள் தொடர்பான உலக வர்த்தக அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல், விவசாயக் கைத்தொழில், விவசாயமல்லாத பொருட்களுக்கான சந்தை வசதி, சேவைகள், வர்த்தக வசதியளிப்பு, விதிகள், 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட நிகழ்ச்சி நிரல் தொடர்பான வரைவுக் குறிப்புகளில் முன்மொழியப்பட்டிருந்த மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட மூல ஒழுங்கு விதிகள் ஆகிய முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியது. குறிப்பாக இலங்கை உலக வர்த்தக

அமைப்பின் விதிகளின் கீழ் எந்தவிதப் பிணக்குகளும் இன்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பிராந்திய, இருதரப்பு, பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்மிக்க பேச்சுவார்த்தைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தும் செயன்முறையில் இந்தத் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளது. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பிராந்திய, இருதரப்பு, பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் பின்வருமாறு;

- இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி (SAFTA) உடன்படிக்கை
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
- உத்தேச வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு (BIMSTEC) உடன்படிக்கை

சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளின் பிரதான நோக்கம், உயர்வான தலா வருமானம், சுற்றுலாத் துறைக்கான சுவர்க்கபுரியாக மாற்றுதல், போட்டிக்குரிய வர்த்தகச் சூழலொன்றில் சாத்தியமான கைத்தொழில்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற அதேவேளையில் வர்த்தகத்திற்கும் அறிவுக்குமான கேந்திர நிலையமாக ஊக்குவித்தல் என்பனவாகும். விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் எதிர்பார்க்கப்படும் ஊழியர் பற்றாக்குறையான இந்தச் சூழ்நிலையில் சேவைகளின் வர்த்தகம் ஆரம்பத்திலேயே தீர்வு காணப்பட வேண்டிய மிகவும் தாராளமயப்படுத்தப்படாத துறையாகக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், முழுமையான பொருளாதார ஒத்துழைப்புக்கான வேலைச் சட்டகங்களை வகுப்பதினூடாக சேவைகளின் வர்த்தகத்திற்காக பொருத்தமான முதலீடுகளைக் கவர்வதற்கும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் உயர்ந்த அளவிலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.1 வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான முன்னேற்றம்

வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தீர்வை வரித் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி இந்தத் திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், வர்த்தக உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன;

#### 2.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

2013 ஆம் ஆண்டில் இலங்கையின் எதிர்மறைப் பட்டியலிலிருந்து 10 பொருட்களை நீக்கியதன் பின்னர், 2015 ஆம் ஆண்டில் எதிர்மறைப் பட்டியல் குறித்த மேலதிக திருத்தங்கள் பற்றி கலந்துரையாடப்படவுமில்லை செயற்படுத்தப்படவுமில்லை.

**அட்டவணை 2.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2014 / 2015**

| 2014 | | 2015 | |
|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 68,856 | 49,126 | 32,676 | 60,539 |

மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், *2014/2015*

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மொத்த வர்த்தகம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 606.08 பில்லியனிலிருந்து ரூபா 674.3 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் இந்தியாவிடமிருந்தான மொத்த இறக்குமதிகள் ரூபா 566.5 பில்லியனாகப் பதிவாகிய அதேவேளையில் இந்தியாவுக்கான மொத்த ஏற்றுமதிகள் ரூபா 107.8 பில்லியனாகப் பதிவாகியது.

முறையே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிடமிருந்தான இறக்குமதிகள் ரூபா 68,856 மில்லியனிலிருந்து ரூபா 32,676 மில்லியன் வரை குறைவடைந்தன் விளைவாக முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது 2015 இல் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான வர்த்தகம் ரூபா 25 பில்லியனிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் இலங்கையினால் இந்தியாவுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி 2014 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 49,126 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 60,539 மில்லியன் வரையில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்த நிலை அட்டவணை 2.1 இல் விளக்கப்பட்டுள்ளது.

### 2.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(PSFTA)

பாகிஸ்தான் இலங்கை இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தானின் கௌரவ வர்த்தக அமைச்சரின் விஜயத்திற்கு இணையாக 2015 நவம்பர் 11 ஆம் திகதியன்று இடம்பெற்றன. இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினரும் இருதரப்பு வர்த்தகம் தொடர்பான தற்போதைய பிரச்சினைகளை ஆராய்ந்தனர்.

பாகிஸ்தான் ஒருதலைப்பட்சமாக சில பொருட்களை எதிர்மறைப் பட்டியலுக்குள் மீண்டும் சேர்த்தமை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் சமநிலையின்மையை உருவாக்குகின்றது என இலங்கை குறிப்பிட்டது. இந்த விடயம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் இரண்டாவது கட்டத்தில் நேர்மறைப் பட்டியலின் கீழ் புதிய பொருட்களின் பட்டிலை பரிமாற்றிக் கொள்வதன் மூலம் எடுத்துக் கூறப்படும் என பாகிஸ்தான் குறிப்பிட்டது. இலங்கையர்களினால் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்திகளுக்கான இறக்குமதி வரித்தக விலையின் பதம்பார்க்கும் பிரயோகம், மக்காச் சோளத்தின் மீது 5% வரியை விதித்தமை, பங்கு முறையின் கீழ்

இறக்குமதி செய்யப்படும் பாஸ்மதி அரிசியின் தரம் ஆகிய பிரச்சினைகள் குறித்து இலங்கை கேள்வியெழுப்பியது.

முதலீடு, சேவைகள் மற்றும் சுங்க விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதன் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரிவு படுத்துவதற்கும் வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானின் வர்த்தக அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கும் பாகிஸ்தானால் முன்மொழியப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறையொன்றை விருத்திசெய்வதற்கும் பாகிஸ்தானினால் முன்மொழியப்பட்டது. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் உருக்குக் கம்பி வெட் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருளாகக் கருதப்படுகின்றபடியினால் உருக்குக் குழாய்களுக்கு விதிக்கப்பட்டிருந்த செஸ் வரியை இல்லாதொழிகின்ற வரியாகக் கருத முடியும் என பாகிஸ்தானினால் மேலும் குறிப்பிடப்பட்டது.

இறுதியாக, பிரதமர் மட்டக் கூட்டங்களுக்கு முன்னர் இந்த சகல பிரச்சினைகளையும் கவனத்திலெடுப்பதற்கு இரு நாடுகளும் உடன்பட்டன. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான இறக்குமதி ஏற்றுமதியை அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2: பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2014 / 2015**

| 2014 | | 2015 | |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 9,577 | 6,761 | 4,026 | 9,147 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2014/2015*

### 2.1.1.3 தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)

தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையானது, பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் இடம்பெற்ற 12 ஆவது சார்க் மாநாட்டின் போது 2004 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கைச்சாத்திடப்பட்டதுடன் 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையானது, ஆப்கானிஸ்தான், வங்காள தேசம், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையின் வர்த்தக விலக்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், உறுப்பு நாடுகள் தமது சுங்கத் தீர்வை வரிகளை படிப்படியாகக் குறைப்பதற்கும், அவர்களது தாராளமயமாக்கப்படாத பட்டியலில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளவை தவிர்ந்த சகல உற்பத்திகள் மீதும் 0% முதல் 5% வரையான மட்டத்திற்கு அவற்றைக் கொண்டுவருவதற்கும் உடன்பட்டுள்ளன.

வர்த்தக வரிவிலக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உடன்பட்டுள்ளவாறு 2015 ஆம் ஆண்டில் கட்டம் I மற்றும் கட்டம் II ஆகியவற்றின் கீழுள்ள சகல பொருட்களுக்கும் இலங்கை வரிவிலக்கு அளித்துள்ளது. குறைந்த அபிவிருத்தி நாடுகளுக்காகவும் (LDC)குறைந்த அபிவிருத்தியல்லாத நாடுகளுக்காகவுமான (NLDC) இலங்கையின் தாராளமயமாக்கப்படாத பட்டியல் பின்வருமாறு;

*குறைந்த அபிவிருத்தியல்லாத நாடுகளுக்காக (NLDC) – 1,058 பொருட்கள்*

*குறைந்த அபிவிருத்தி நாடுகளுக்காக (LDC) – 925 பொருட்கள்*

பின்வரும் அட்டவணையின் பிரகாரம் 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதமாக தாராளமயப்படுத்தப்படாத பட்டியலுக்கு வெளியில் எடுக்கப்படுகின்ற உற்பத்திகளின் மீது உறுப்பு நாடுகள், தமது தீர்வை வரியை 0% முதல் 5% வரை குறைத்தல் வேண்டும்.

**அட்டவணை 2.3 தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கை வரிவிலக்கு நிகழ்ச்சித் திட்டம்**

| இல. | நாடுகள் | வருடங்கள் | பூர்த்தி செய்யப்படவிருப்பது | தீர்வை வரி குறைக்கப்பட் வேண்டிய வீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்தியா, பாகிஸ்தான் | 03 | 2015 டிசம்பர் 31 | 0 - 5% |
| 2 | இலங்கை | 06 | 2018 டிசம்பர் 31 | 0 - 5% |
| 3 | கு.அ.நாடு (நேபாளம் தவிர்ந்த) | 08 | 2020 டிசம்பர் 31 | 0 - 5% |
| 4 | நேபாளம் | 08 + | 2021 ஆகஸ்ட் 01 | 0 - 5% |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையின் கீழ் 2015 ஆம் ஆண்டில் வரிவிலக்கு நிகழ்ச்சித் திட்டத்தில் கட்டம் III இற்காக இலங்கை தனது விருப்பப் பட்டியலை சமர்ப்பித்துள்ளது. தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையின் கீழான வர்த்தகத் தரவுகளை அட்டவணை 2.4 காட்டுகின்றது.

**அட்டவணை 2.4 இலங்கைக்காக தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி தொடர்பான உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுததி- 2014 / 2015**

| 2014 | | 2014 | |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 237 | 1,975 | 696 | 3,270 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2014/2015*

### 2.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நிலையியற் குழுவின் 47 ஆம் 48 ஆம் அமர்வுகள் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நிலையியற் குழுவின் 47 ஆம் அமர்வு 2015 ஆடி 27 முதல் 28 வரை பெங்கொக் நகரில் இடம்பெற்ற அதேவேளையில், 48 ஆம் அமர்வு 2015 டிசம்பர் 22 முதல் 23 வரை பெங்கொக் நகரில் இடம்பெற்றது. 48 ஆம் அமர்வில் பின்வரம் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

#### 1. பொருட்கள் பரிமாற்ற வர்த்தகம்

I. 4ஆம் சுற்றின் தீர்வைவரிச் சலுகைகளை மேலும் தாமதிக்காமல் நடைமுறைப்படுத்துவதற்கு சகல குழு உறுப்பினர்களும் உடன்பட்டனர்.

II. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நிதி ஆவணத்திற்கு 2 ஆவது திருத்தத்தில் உள்ளடக்குவதற்காக மூலச் சான்றிதழின் 8 ஆம் கூண்டுக்கான முன்மொழிவொன்று கொரியாக் குடியரசினால் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 2. சேவைகள் தொடர்பான உடன்படிக்கை

சேவை சம்பந்தமான செயற் குழுவொன்றைத் தாபிப்பதற்கு அமைச்சரவை மட்டச் சபைக்கு பரிந்துரை செய்வதற்கும், சேவைகளை இலகுபடுத்துவதற்கும் துறைரீதியாக உத்துழைப்பு வழங்கக் கூடிய துறைகளுக்காக மாதிரிகள், செயல் திட்டம், கால வரையறை ஆகியன பற்றி முதலாவது செயற் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் உடன்பட்டன.

#### 3. முதலீடு தொடர்பான உடன்படிக்கை

முதலீடு தொடர்பான செயற் குழுவொன்றைத் தாபிப்பதற்கு சபைக்கு பரிந்துரை செய்வதற்கும், முதலீட்டு உடன்படிக்கையின் பேச்சுவார்த்தைகளுக்கான மாதிரிகள், செயல் திட்டம், கால வரையறை ஆகியன பற்றி கலந்துரையாடுவதற்கும் உடன்பட்டன.

## 4. வர்த்தக வசதியளித்தல் தொடர்பான உடன்படிக்கை

வர்த்தக வசதியளித்தல் தொடர்பான செயற் குழுவொன்றைத் தாபிப்பதற்கு சபைக்கு பரிந்துரை செய்வதற்கும், அதன் வேலை நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்குமான மாதிரிகள், செயல் திட்டம், கால வரையறை ஆகியன பற்றி கலந்துரையாடுவதற்கும் உடன்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக, பசுபிக் பிராந்திய நாடுகளை உள்ளடக்கக் கூடிய விதமாக ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் உறுப்புரிமைகளை விரிவுபடுத்தவதற்கு தயாராக இருப்பதாக ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளையில், வர்த்தகத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற நேர்மறையான தாக்கத்தைக் கவனத்திலெடுத்து, இந்த விரிவாக்கத்திற்காக குழு உடன்பட்டது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் இலங்கைக்கான வர்த்தக நடவடிக்கைகளை அட்டவணை 2.5 காட்டுகின்றது.

**அட்டவணை 2.5 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2014 / 2015**

| 2014 | | 2015 | |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 1,673 | 15,666 | 2,103 | 17,522 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2014/2015*

### 2.1.1.5 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

பொருளாதாரங்களுக்குள் அதிகரித்த இணைப்பையும் அவற்றிற்கு இடையிலான சார்பு நிலையையும் உருவாக்குவதற்கு உலகலாவிய மற்றும் பிராந்திய ஒத்துழைப்பைத் தொடர்கின்றது. வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கையின் வங்காளதேச மக்கள் குடியரசு, பூட்டான் இராச்சியம், இந்தியக் குடியரசு, மியன்மார் ஒன்றியம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, தாய்லாந்து மற்றும் நேபாள இராச்சியம் ஆகிய உறுப்பு நாடுகளின் வர்த்தப் பொருளாதாரங்களின் இடைத்தொடர்புகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 1997 ஆம் ஆண்டில் வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மேலதிக பிராந்திய ஒத்துழைப்புக்கான பாரிய வாய்ப்பொன்றை வழங்குதல், புதிய மற்றும் வளர்ந்துவரும் சவால்களுக்குப் பதிலளித்தல் என்பன இந்த சுதந்திரவர்த்தக உடன்படிக்கையின் நோக்கமாகும்.

வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தீர்வை வரி விலக்கு மாதிரிகளை அட்டவணை 2.6 மற்றும் அட்டவணை 2.7 காட்டுகின்றது.

**அட்டவணை 2.6 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தீர்வை வரி விலக்கு அட்டவணை**

| இல. | உபாயங்கள் | தீர்வை வரியின் சதவீதம் (6 இலக்க மட்டத்தில் இ.கு. -2007) |
|---|---|---|
| 1 | உடன்படிக்கை செய்யப்பட்டவுடன் வரியை நீக்குதல் | 10% |
| 2 | சாதாரணமாக வரியை நீக்குதல் | 48% |
| 3 | சாதாரணமாக வரியை குறைத்தல் | 19% |
| 4 | விலக்கல் (எதிர்மறைப் பட்டியல்) | 23% |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

பல்-துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழுவின் இருபதாவது கூட்டம் 2015 செப்டம்பர் 07 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம்பெற்றது. அதன் பிரகாரம் உறுப்பு நாடுகள் பின்வரும் முக்கியமான பகுதிகளின் மீது கவனம் செலுத்தியுள்ளது.

1. பொருட்களின் வர்த்தகம் மற்றும் பல்-துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான வரைசட்டக உடன்படிக்கையின் திருத்தம் தொடர்பான உடன்படிக்கையின் எஞ்சிய வரைவு வாசகங்களையும் இறுதிநிலைப்படுத்துதல்.

2. பொருட்களில் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையினை அமுலாக்கவுள்ள திகதி.

3. சாதாரணமாக வரியை குறைத்தல் மற்றும் எதிர்மறைப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களை மீளாய்வு செய்தல் தொடர்பான மாதிரிகள் பற்றிய கலந்துரையாடல்.

பல்-துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழுவின் இருபதாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு;

1. விலைக்குறிப்புப் பட்டியலை மீளாய்வு செய்வதற்கு வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழுக் கூட்டத்தின் இறுதித் தினத்திலிருந்து ஒரு மாத காலத்தை ஒதக்குதல்.
2. கீழே குறிப்பிடப்பட்டள்ள அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஆரம்பத் திகதி மற்றும் நிறைவடையும் காலம் ஆகிய இரண்டிலிருந்தும் மேலதிகமாக ஒரு வருட காலத்தை நேபாளம் வழங்கியுள்ளதுடன் நேபாளத்திற்கு 2016 இலிருந்து அதற்கப்பால் சலுகைக்காக வேண்டிக்கொள்ள முடியும்.
3. உற்பத்தி பற்றிய உறுதியான விதியை (பெறுமதி வீதத்தை அதிகரித்தல்) மீளாய்வு செய்வதற்கு இந்தியாவுக்கு அவசியமாக இருந்த அதேவேளையில், அது சம்பந்தமான வரைவைத் தயாரித்து செயலகத்திற்கு அனுப்புவதற்கு உடன்பட்டது.
4. 2015 டிசம்பர் மாதத்தில் சிரேட்ட அலுவலர் கூட்டத்தை ஒழுங்குசெய்வதற்கும் அதன் பின்னர் இறுதி உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சர்களின் கூட்டத்தை நடாத்துவதற்கும் வங்காளதேசம் உடன்பட்டது.

**அட்டவணை 2.7 உடன்படிக்கை செய்யப்பட்டவுடன் வரியை நீக்குதல்**

| இல. | நாடுகள் | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்காக | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்காக |
|---|---|---|---|
| 1 | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து | 2016 ஜுலை1 முதல் 2019 ஜுன் 30 வரை | 2012 ஜுலை1 முதல் 2017 ஜுன் 30 வரை |
| 2 | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் | 2012 ஜுலை1 முதல் 2021 ஜுன் 30 வரை | 2012 ஜுலை1 முதல் 2019 ஜுன் 30 வரை |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

**அட்டவணை 2.8 சாதாரணமாக வரியை நீக்குதல்**

| இல | நாடுகள் | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்காக | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்காக |
|---|---|---|---|
| 1 | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து | 2017 ஜுலை 1 முதல் 2022 ஜுன் 30 வரை | 2017 ஜுலை1 முதல் 2020 ஜுன் 30 வரை |
| 2 | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் | 2017 ஜுலை 1 முதல் 2022 ஜுன் 30 வரை | 2017 ஜுலை1 முதல் 2025 ஜுன் 30 வரை |

*மூ லம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

### 2.1.1.6 உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

சீனா 2012 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் இரண்டாவது பாரிய இறக்குமதியாளராகவும் அதேபோன்று 2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மூன்றாவது பாரிய சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு பங்களிப்புச் செய்த நாடுமாகும். இருப்பினும் இலங்கையின் ஏற்றுமதிக்கான சீனாவின் பங்களிப்பு மிகவும் குறைவானதாகும். 2005 முதல் 2014 வரையான தசாப்தக் காலப்பகுதியில் சீனா இலங்கையின் பாரிய இருதரப்பு அபிவிருத்திப் பங்காளராக இருந்துவருகின்றது. நீண்ட கால இருதரப்பு உறவு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகப் பாய்ச்சலை விரிவுபடுத்தல் ஆகிய சூழலில் சீனாவுக்கு தொடர்ச்சியாக சாதகமானதும் மிகவும் சிறந்த வர்த்தகச் சமநிலையை ஏற்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு சீனாவுக்கு மேற்கொள்ளப்படுகின்ற இலங்கையின் ஏற்றுமதியை விரிவுபடுத்தும் நோக்கில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான விடயக் கற்கையை மேற்கொள்வதற்காக வர்த்தகம் தொடர்பான கூட்டுச் செயற்குழு ஒன்றைத் தாபிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு மே மாதத்தில் முன்னாள் இலங்கை சனாதிபதியின் சீனாவுக்கான விஜயத்தின் போது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், கூட்டு விடயக் கற்கை 2014 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட அதேவேளையில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது சுற்றும் நிறைவடைந்திருந்தது. மக்கள் சீனக் குடியரசின் சனாதிபதி அவர்களின் அழைப்பின் பேரில் 2015 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு நாட்டினதும் பொருளாதாரங்களுக்குள் காணப்படும் சமச்சீரின்மையை அடையாளங்கண்டு, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான உண்மையான முன்னேற்றத்தைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் மிகவும் ஆர்வமாக இருக்கின்றது என்பதை அதிமேதகு சனாதிபதி அவர்கள் தெரிவித்தார்கள்

2015 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான கூடிய விரைவில் 3 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.7 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கையுடனான வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான வர்த்தகத்தின் விபரங்கள் அட்டவணை 2.9 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.9 2015 இல் வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள்**

| இல. | வர்த்தக உடன்படிக்கை | இறக்குமதிப் பெறுமதி (ரூ.மி) | ஏற்றுமதிப் பெறுமதி (ரூ.மி) |
|---|---|---|---|
| 1 | இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 32,676 | 60,539 |
| 2 | பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 4,026 | 9,147 |
| 3 | தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பகுதி (SAFTA) உடன்படிக்கை | 696 | 3,270 |
| 4 | சார்க் விருப்பு வர்த்தக ஒழுங்கு (SAFTA) உடன்படிக்கை | 95 | 703 |
| 5 | ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 2,103 | 17,522 |
| **மொத்தம்** | | **39,596** | **91,181** |

*மூலம் : இலங்கை சுங்கத் திணைக்களம், 2015*

## 2.2 கூட்டுப் பொருளாதார உடன்படிக்கைகள்

**அட்டவணை 2.10 கூட்டுப் பொருளாதார வர்த்தகக் குழுக்களின் நிலைத்தொகுப்பு**

| ,y. | கூட்டு வர்த்தகக் குழுக்கள் | ஆவணம் | ஆவணத் திகதி | நோக்கெல்லை | கால இடைவெளி | தற்போதைய தொடர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொருளாதாரக் கூட்டமைப்புக்கான இலங்கை - ஈரான் கூட்டு ஆணைக்குழு | 22 உறுப்புரைகளைக் கொண்ட வர்த்தக உடன்படிக்கை | 25.11.2004 | பொருட்கள் பரிமாற்ற வர்த்தகம் | வருடாந்த அடிப்படையில் மாற்றுதல் | 24.02.2016 (கொழும்பு) |
| 2. | இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழு | உடன்பட்டுள்ள அறிக்கைகள் | 23.06.2006 | வர்த்தகம் மற்றும் முதலீடு, சுற்றுலாத் துறை, விமானச் சேவைகள், பாதுகாப்பு போன்றன. | – | 21-22 .10. 2013 (மலேசியா) |
| 3. | தொழில்நுட்ப உதவி மற்றும் விவசாய அபிவிருத்தி தொடர்பான இலங்கை - வியட்னாம் கூட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 05 உறுப்புரைகளைக் கொண்ட உடன்படிக்கை | 2013 | தொழில்நுட்பம் / நீரியல் அபிவிருத்தி | – | – |
| 4. | இலங்கை - வியட்னாம் கூட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 06 உறுப்புரைகளைக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் | 14.10.2011 | தொழில்நுட்பம் | வருடாந்த அடிப்படையில் மாற்றுதல் | – |
| 5. | வியட்னாமுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் தொடர்பான உப குழு | உடன்பட்டுள்ள அறிக்கைகள் | 26.03.2015 | இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு, | – | 26.03.2015 (கொழும்பு) |
| 6. | இலங்கைக்கும் கென்யாவுக்கும் இடையிலான கூட்டு வர்த்தகக் குழு | 22 உறுப்புரைகளைக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் | 2013 | தொழில்நுட்பம் / பொருட்கள் பரிமாற்ற வர்த்தகம் | இருதரப்பினரில் ஒரு தரப்பினர் வேண்டிக்கொள்ளும் போது இலங்கையில் மாற்றுதல். | 11.11.2014 (இலங்கை) |
| 7. | இலங்கைக்கும் ஈராக்குக்கும் இடையிலான பொருளாதார, மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்புக்கான கூட்டுக் குழு | உடன்பட்டுள்ள அறிக்கைகள் | – | – | – | 20-23.10.2010 (கொழும்பு) |
| 8. | இலங்கை - தென் ஆபிரிக்கா இருதரப்புப் பங்குடமைப் பேரவை | – | – | – | – | 24-25.02.2015 (கொழும்பு) |
| 9. | வங்காளதேசம் - இலங்கை கூட்டு பொருளாதார ஆணைக்குழு | இரண்டாவது இலங்கை வங்காளதேச வெளிநாட்டு அலுவலக ஆலோசனை பற்றி உடன்பட்டுள்ள அறிக்கைகள் | 22.04.2013 | – | – | 17-18.11.2014 (கொழும்பு) |
| 10. | இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு கூட்டமைப்புக்கான கூட்டு ஆணைக்குழு | உடன்பட்டுள்ள அறிக்கைகள் (2007.10.01 ஆம் திகதியன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனக் குறிப்படப்பட்டுள்ளது. | 13.10.2014 | மிகவும் முனைப்பான இடைத்தொடர்புக்கு வசதியளிப்பதன் மூலம் பரஸ்பர நன்மைகளின் சகல பகுதிகளும் | இரு தரப்பாக | 13.10.2014 (ஜகார்தா) |
| 11. | பெலாருசுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டமைப்பு | 22 உறுப்புரைகளைக் கொண்ட உடன்படிக்கை | 26.08.2013 | சட்ட விடயங்கள் | இருதரப்பினரில் ஒரு தரப்பினர் வேண்டிக்கொள்ளும் போது மின்ஸ்கிலும் கொழும்பிலும் மாற்றுதல். | 09-10.07.2014 (கொழும்பு) |
| 12. | இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையிலான கூட்டு செயற்குழு | – | – | – | – | – |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

## 2.3 இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பு

இயைபு முறையான வகைப்படுத்தல் என பொதுவாக அழைக்கப்படுகின்ற "இயைபு முறை வர்த்தப் பொருட்களின் பெயர் மற்றும் குறியீட்டு முறை" என்பது உலக சுங்க அமைப்பின் உறுப்பு நாடுகளினால் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இறக்குமதி ஏற்றுமதிப் பொருட்களுக்கான தீர்வை வரி மற்றும் ஏனைய வரிகளை அறவிடுவதற்கும், சொல்லப்பட்ட பொருட்களை அடையாளங் காணுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்ற முறையாகும். இறக்குமதி ஏற்றுமதி பற்றிய புள்ளி விபரங்களைத் திரட்டுவதற்கு இந்த முறை மிகவும் பயனுள்ளதாகும். அதன் பிரகாரம் இலங்கை 08 குறியீட்டிலக்கங்களைக் கொண்டுள்ள குறியீட்டு முறையை ஒதுக்கியுள்ள அதேவேளையில், இறுதியான குறியீட்டிலக்கம் இலங்கையில் விசேட சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய உப பிரிவாகும்.

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்திலும் திருத்தப்பட்ட சுங்கக் கட்டளைச் சட்டத்திலும் (235 ஆம் அதிகாரம்) உள்ளடங்கியுள்ள சட்டரீதியான ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வியாபார மற்றும் தீர்வை வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தற்போது பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுகின்ற தாக்கத்தை கவனத்திலெடுத்து, பல்வேறு பொருட்களுக்காக வேறுபட்ட வரி வீதங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒருசில பொருட்களைத் தவிர பொதுவாக உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான மூலப் பொருட்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களுக்காக பூச்சிய அல்லத குறைந்த வரி வீதம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளையில், முடிப்புப் பொருட்களுக்காக கூடிய வரி வீதத்தையும், இடைநிலைப் பொருட்களுக்காக நடுத்தர வரி வீதத்தையும் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வர்த்தகப் பொருட்களின் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள அளவுகளைக் கொண்டதாக 2015 ஆம் ஆண்டுக்கு உரிய தீர்வை வரித் திட்டம் கீழே அட்டவணை 2.11 இல் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 2.11- 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வை வரிக் கட்டமைப்பு**

| இல. | தீர்வை வரி வீதம் | சுங்கத் தீர்வை வரிசைகளின் எண்ணிக்கை (இ.கு 2012 : 8 எண்களில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | வரி விலக்கு | 3,922 | 56.31 |
| 2 | 15% | 1,324 | 19.01 |
| 3 | 30% | 1,457 | 20.92 |
| 4 | 75% | 03 | 0.04 |
| 5 | 85% | 01 | 0.01 |
| 6 | 125% | 05 | 0.07 |
| 7 | குறிப்பிட்ட | 67 | 0.96 |
| 8 | குறிப்பிட்ட மற்றும் பெறுமதியின் மீது | 186 | 2.67 |
| **மொத்தம்** | | **6,965** | **100.00** |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

2015 நவம்பர் மாதத்தில் 7.5%˙மாக காணப்பட்ட தீர்வை வரி நீக்கப்பட்டதுடன் 25% ஆகக் காணப்பட்ட சாதாரண தீர்வை வரி 30% ஆக மாற்றப்பட்டது.

**அட்டவணை 2.12 - 2008 முதல் 2015 வரை தீர்வை வரிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்**

| இல | தீர்வை வரி வகைகள் | தீர்வை வரிகளின் எண்ணிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
| 1 | இலவசம் | 3,922 | 3,410 | 3,379 | 3,024 | 3,024 | 2,967 | 764 | 759 |
| 2 | 2.5% | | | | | | | 2,087 | 2,084 |
| 3 | 5% | | | | 410 | 412 | 415 | | 1,563 |
| 4 | 6% | | | | | | | 475 | 466 |
| 5 | 7.5% | | 188 | 184 | | | | | |
| 6 | 15% | 1,324 | 1,601 | 1,590 | 1,587 | 1,508 | 1,516 | 1,541 | |
| 7 | 25% | | 1,450 | 1,415 | | | | | |
| 8 | 28% | | | | | | | 1,382 | 1,366 |
| 9 | 30% | 1,457 | | | 1,504 | 1,323 | 1,327 | | |
| 10 | சொகுசு வீதங்கள் | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 |
| 11 | குறிப்பான/ அலகு வீதங்கள் | 67 | 84 | 84 | 84 | 77 | 60 | 52 | 51 |
| 12 | குறிப்பான அல்லது மதிப்பீட்டு | 186 | 184 | 183 | 200 | 162 | 193 | 210 | 168 |
| மொத்தம் | | **6,965** | **6,926** | **6,844** | **6,818** | **6,515** | **6,487** | **6,520** | **6,466** |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2015*

### 2.3.1: 2015 இல் இயைபு முறைகளுக்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட தேசிய உப பிரிவுகள்

2015 இல் இயைபு முறைகளின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் குறிப்புகளுக்காக அட்டவணை 4.1 இல் இணைக்கப்படுகின்றன. (இணைப்பு - I).

### 2.3.2 தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சுங்கத் தீர்வை வரிக் கட்டமைப்பு- வ.பா.க 2015

2015 ஆம் ஆண்டின் வருமானப் பாதுகாப்புக் கட்டளையின் கீழ் வெளியிடப்பட்ட தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சுங்கத் தீர்வை வரிக் கட்டமைப்பு குறிப்புகளுக்காக அட்டவணை 4.2 இல் இணைக்கப்படுகின்றன. (இணைப்பு - II).

### 2.3.3: 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் (சுங்க இறக்குமதித் தீர்வை) வெளியிடப்பட்ட வருமானப் பாதுகாப்புக் கட்டளையின் விபரங்கள் குறிப்புகளுக்காக அட்டவணை 4.3 இல் இணைக்கப்படுகின்றன. (இணைப்பு - III).

## 2.4 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரிச் சட்டம்

